# எஸ்.எச்.எம். ஜெமீல் பற்றிய ஒரு குறிப்பு

(எஸ்.எல். சியாத் அஹமட் எழுதிய ‘எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் அறிவாக்கங்கள்’ எனும் நூலில் இருந்து மீள்பிரசுரிக்கப்பட்டது.)

ஒக்டோபர் 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். எச். எம். ஜெமீல்

## பிறப்பு

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது எனும் ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். எச். முஹம்மது ஜெமீல் அவர்கள் இலங்கையின் ஒரு முதுபெரும் கல்விமான், நிர்வாகி, சிரேஷ்ட எழுத்தாளர், பேச்சாளர், சிறந்த ஆய்வாளர், பன் நூலாசிரியர்.

கிழக்கே வங்காள விரிகுடாக் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தையும் மேற்கே கரைவாகு வட்டை எனப்படும் மருதம் நிலப்பரப்பையும் கொண்ட அழகிய ஊர் சாய்ந்தமருதாகும். வடக்கே கல்முனைக்குடியும், தெற்கே சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவும் இதன் எல்லைகளாகும்.

1940 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 6.30 மணிக்கு மீராலெப்பை சாஹுல் ஹமீத், முத்தலிபு வைத்தியர் முக்குலத்தும்மா தம்பதியினரின் மூத்த புதல்வராகப் பிறந்தார். (பிறப்புப் பதிவுத் திகதி : 1940 நவம்பர் 21) இவரது சகோதரிகள் ஜெஸீமா (ஜுனைதீன்), நஸீரா (அபுஸாலி), பழீலா (பதூர்தீன்) சனூபா (முஸாதிக்) என்போராவர்.

## கல்வி

யூசுப் லெப்பை (வெட்டுக்கிளி லெப்பை) அவர்களிடம் குர்ஆன் மத்ரஸாக் கல்வியைப் பெற்ற இவர், காரைதீவு இராமகிருஷ்ண வித்தியாலயம், கல்முனை பாத்திமாக் கல்லூரி, கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

நெல்லைநடேஸ் எனும் எழுத்தாளர் சிறந்த அதிபர்களைப்பற்றிய ஆய்வொன்றினை மேற்கொண்டு வீரகேசரிப் பத்திரிகையில் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை எழுதிக் கொண்டிருந்த சமயம், பாத்திமாக் கல்லூரியின் அதிபராகக் கால்நூற்றாண்டு காலம் கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்த அருட் சகோதரர் எம். எம். இமானுவேல் அவர்களையும் பேட்டிகண்டார். 'உங்களுடைய தலைசிறந்த மாணவன் யார்' என அதிபர் இம்மானுவேல் அவர்களைக் கேட்டபோது அதற்கு அவர் 'எஸ். எச். எம். ஜெமீல்' என்று பதில் அளித்தார். (வீரகேசரி : 4.9.1988)

ஆங்கில மொழி மூலம் கல்வி பெற்ற ஜெமீல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்தில் சிறப்புப் பட்டமும்; பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் முதுமாணிப்பட்டப் படிப்பினை ஆரம்பித்து பின்னர் அக்கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு இடமாற்றப்பட்டபின் அங்கு தொடர்ந்து கற்று எம். எ. பட்டத்தினையும் பெற்றார். அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை டிப்ளோமா பட்டமும், ஐக்கிய இராச்சியத்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைசார் மற்றும் பல்கலைக்கழக நிருவாகம் தொடர்பான பயிற்சியையும் பெற்றுக்கொண்டார்.

மிக இளம் வயதிலிருந்து தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் எழுத்துத் துறையிலும் ஈடுபாடு உடையவராய் இருந்தார். 'எனது ஊர்' எனும் தலைப்பிலான இவரது முதலாவது ஆக்கம் தினகரன் ஞாயிறு பாலர் கழகப் பகுதியில் 1949 இல் வெளிவந்தது. (அங்கத்துவ இலக்கம் 2364). பாடசாலைகளில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசைப் பலமுறை பெற்றுள்ளார். 1961ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் ஆண்டுப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றமைக்கான 'பிரான்ஸிஸ் கிங்ஸ்பெரி' பரிசையும் இவர் வென்றுள்ளார்.

எ. எம். எ. அஸீஸ் அதிபராக இருந்த காலத்தில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கற்கும் பொழுது அக்கல்லூரியில் தமிழ் மற்றும் வரலாறு பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருந்த கார்த்திகேசு சிவத்தம்பி (பிற்காலத்தில் பேராசிரியர்) நடாத்திய வாராந்தர வானொலி நிகழ்ச்சியான 'இளைஞர் மன்றம்' என்பதில் 1957 இலிருந்து கிரமமாகப் பங்கு பற்றினார். அன்று ஆரம்பித்த வானொலித் தொடர்பு இன்று வரை நீடிக்கிறது.



## தொழில்

தொழில் ரீதியாக முதலில் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியர் ஆகவும் 'அருணாசலம் ஹோல்' உதவி வார்டனாகவும் பதவியேற்றுப், பின்பு படிப்படியாக உயர் பதவிகளை வகிக்கலானார். கல்லூரி ஆசிரியர், அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், கல்வித் திணைக்களத்தில் உயர் அதிகாரி, பரீட்சைத் திணைக்கள உதவி ஆணையாளர், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர், முஸ்லிம் சமய, கலாச்சார ராஜாங்க அமைச்சின் செயலாளர், கல்வி, கலாச்சார அமைச்சின் மேலதிகச் செயலாளர், அதனைத் தொடர்ந்து அவ்வமைச்சின் ஆலோசகர் எனப் பல்வேறு உயர் பதவிகளை வகித்து 2000ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு, சவூதி அரேபி யாவின் தலைநகரான ரியாதில் இயங்கிவரும் இலங்கை சர்வதேசப் பாடசாலையில் 2001 ஓகஸ்ட் முதல் 2004 ஜுலை வரை அதிபராகக் கடமையாற்றினார்.

இவர் தனது தாய்மாமனான டாக்டர் எ. பி. எம் இப்ராஹீமின் மூத்த மகளான சித்தி ஆரிபாவைத் திருமணம் செய்தார். இத் தம்பதியினரின் ஏகபுதல்வன் முஹம்மது நஸீல். தற்போது தனது மனைவி, மகன், மருமகள் பாத்திமா ஷஸானா, பேரக் குழந்தைகளான அக்மல், ஹமாத் ஆகியோருடன் கொழும்பில் வசித்து வருகிறார்.

## கல்விப்பணிகள்

கல்வித்துறையில் அகன்றதும் ஆழமானதுமான அறிவையும் அனுபவத்தையும் பெற்றிருந்த காரணத்தினால் சென்ற இடமெல்லாம் சிறப்பாகக் கடமையாற்ற இவரால் முடிந்தது.

இந்நாட்டுக் கல்வித்துறையில் சகல மட்டங்களிலும் கடமையாற்றி இருக்கிறார். அப்பதவிகள் மூலம் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திச் சமுதாய முன்னேற்றத்திற்கான பல கல்விச் சேவைகளை ஆற்றியுள்ளார். அவர் சேவைசெய்த அனைத்து இடங்களிலும் அரசியலாளர், மேலதிகாரிகள், சக பணியாளர்கள், பெற்றோர், மாணவர், பொதுநல விரும்பிகள் என்போரின் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்த காரணத்தினால் அவ்விடங்களில் பாரிய மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் மேற்கொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, கல்முனை சாஹிராக் கல்லூரி மற்றும் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை என்பவற்றின் முன்னேற்றத்தில் இவரது பங்கு கணிசமானதாகும்.

கல்முனை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசேட உயர்வகுப்புகள் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமாகும். கிழக்குப் பிராந்தியத்தின் கல்விப் பணிப்பாளர் ஏ. எம். மஜீத் மற்றும் உயர் கல்லூரி அதிபர் களான எஸ். எச். எம். ஜெமீல், ஏ. ஆர். முஹம்மது அலி, எம். எச். யாக்கூப், ஏ. சாஹுல் ஹமீத், எம். ஐ. உதுமா லெப்பை, பிரதி அதிபர் எம். எம். இப்றாஹீம் என்போர் இணைந்து கல்முனை மாவட்ட அதிபர்கள் சங்கம் மூலம் நடாத்திய வார இறுதி வகுப்புக்கள் கிழக்குப் பிராந்தியக் கல்வி வரலாற்றில் மிகப் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும்.

உயர் வகுப்புகளில் ஆசிரியர் மிகத் தட்டுப்பாடாக இருந்த 1970களில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிதான் பாணமையிலிருந்து களுவாஞ்சிகுடி - மண்டூர் வரையான முஸ்லிம், தமிழ் மாணவர்கள் பெருந் தொகையாக பல்கலைக்கழகம் செல்வதற்கான கதவைத் திறந்துவிட்டது. பிற மாவட்டங்களிலிருந்து அதிசிறந்த ஆசிரியர்களை வரவழைத்து இங்குள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் ஸாஹிராக் கல்லூரியில் ஒன்று கூடவைத்து நடத்திய வார இறுதி வகுப்புகளின் பலனைப் பெற்ற மாணவ, மாணவிகள் நாடளாவிய ரீதியிலும் பிறநாடுகளிலும் இன்று சிறப்புற வாழ்கின்றனர்.

பிறிதொரு சமயத்தில் இவ்வகுப்புக்களின் வெற்றியை அடியொற்றி வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரிலேயே எம். ஐ. எம். நளீம் ஹாஜியாரினால் நிறுவப்பட்ட இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் இத்தகைய வகுப்புக்களை நாடு முழுவதிலும் நடத்தியதன் காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர் பயன் பெற்றனர்.

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடமையாற்றிய காலத்தில், ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதில் அக்கறையுடன் செயற்பட்டார். நாடளாவிய ரீதியில் கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இவரது ஈராக் விஜயத்தின் பலனாய் அரபு நாடுகளின் ஆசிரியர் சம்மேளனத்தின் பார்வையாளர் அந்தஸ்த்து இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்துக்குக் கிடைத்தது. இதன் செயலாளராகவிருந்த ஏ. எல். எம். றாஸிக் பக்தாத்தில் நடைபெற்ற அதன் வருடாந்த



மகாநாட்டில் 1982 இல் கலந்து கொண்டார். ஆயினும் ஈரான் - ஈராக் யுத்தம் தொடங்கிய காரணத்தினால், இத்தொடர்பினை வலுப்படுத்த முடியாமற் போய்விட்டது.

## எழுத்து வண்மை

ஜெமீலின் எழுத்து வண்மை மலர்ந்த இடம் பேராதனைப் பல்கலைக்கழகமாகும். முதலாவது கட்டுரையான 'அறிஞர் கண்ட அண்ணல் நபி பெருமான் (ஸல்)' பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையிலும் (1960), முதலாவது கவிதை 'என்னாளோ' பல்கலைக்கழக வருடாந்த சஞ்சிகையிலும் (1962), முதலாவது சிறு கதையான 'கடன் தீர்ந்தது' பண்டாரவளையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த மணிக்குரலிலும் (1964) பிரசுரமாயின. இவற்றினைத் தொடர்ந்து சில சிறுகதைகளும், கவிதைகளும் வெளிவந்தாலும் அத்துறைகளிலான ஈடுபாடு பல்கலைக்கழக வாழ்வோடு முற்றுப் பெற்றது.

இலக்கியம், வரலாறு, கல்வி, அரசியல், நாட்டுப்புறப் பண்பாட்டியல் என்னும் துறைகளிலான ஆய்வு முயற்சிகள் வலுப்பெற்று இன்றுவரை 18 நூல்களை வெளியிட்டுள்ளார். மொழிபெயர்ப்பு நூல்கள் இரண்டு வெளிவந்துள்ளன. 14 நூல்களின் தொகுப்பு / பதிப்பாசிரியராயும் இருந்துள்ளார். சுமார் 120 ஆய்வுக்கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. 50 நூல்களுக்கான பதிப்புரை, மதிப்புரை, சிறப்புரை வழங்கியுள்ளார். வானொலியில் (பிறநாடுகள் உட்பட) 130 பேச்சுக்கள், கலந்துரை-யாடல்கள், நிகழ்ச்சிகள் என்பனவற்றிலும்; தொலைக்காட்சியில் 12 நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்.

தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, நவமணி, தினக்குரல், டெயிலிநியூஸ், ஒப்ஸேவர், டெயிலி மிரர், ஐலண்ட், எக்கனோமிக்ஸ் ரைம்ஸ், மணிக்குரல், அல்- இஸ்லாம், ஸாஹிரா, மித்திரன், அல் அரப், வளர்மதி, செங்கதிர், ஞானம், மல்லிகை ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளியிடப்படும் விஷேட மலர் களிலும் இவரது கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள்

எஸ். எச். எம். ஜெமீலின் நூல்கள் பின்வருமாறு:

1. எ.எம். எ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பங்களிப்பும் (1980)
2. ஸேர். ராஸிக் பரீத் அவர்களின் கல்விப்பணி (1984)
3. சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசல் வரலாறு (1989)
4. கல்விச் சிந்தனைகள் (1990)
5. நினைவில் நால்வர் (1993)
6. கலாநிதி ஜாயாவின் கல்விப்பணிகள் (1994)
7. சுவடி ஆற்றுப்படை - முதலாம் பாகம் (1994)
8. சுவடி ஆற்றுப்படை - இரண்டாம் பாகம் (1995)
9. கிராமத்து இதயம் - நாட்டார் பாடல்கள் ஆய்வு (1995)
10. இஸ்லாமியக் கல்வி (1996)
11. கல்விச் சிந்தனைகள் - இரண்டாம் பதிப்பு (1996)
12. சுவடி ஆற்றுப்படை - மூன்றாம் பாகம் (1997)
13. கலாநிதி பதியுதீன் மஹ்மூதின் கல்விப்பணிகள் (1997)
14. காலச் சுவடுகள் (1998)
15. நமது முதுசம் (2000)
16. சுவடி ஆற்றுப்படை - நான்காம் பாகம் (2001)
17. கிராமத்து இதயம் - விரிவாக்கிய இரண்டாம் பதிப்பு (2008)
18. இலங்கைப் பாராளுமன்றத்தில் முஸ்லிம்கள் (2012)

## மொழிபெயர்ப்புகள்

19. பொது நிதியியல் (1966)
20. துவான் புர்ஹானுத்தீன் ஜாயா (1990)

## தொகுப்புகள் / பதிப்புகள்

21. அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் (1992)
22. அல்லாமா எம். எம். உவைஸ் (1994)



23. அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் (1997)
24. கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள் (1998)
25. Islam in Independent Sri Lanka (1998)
26. Sri Lanka Udana (Co-Editor: R.A.A. Ranaweera) (1998)
27. புத்தளம் மாவட்ட முஸ்லிம்கள் (1999)
28. A. M. A. Azeez - A Profile - (2007)
29. A. M. A. Azeez - Senate Speeches - (Co- Editor : M.Ali Azeez (2008)
30. A.M.A. Azeez - Muslim Education in Sri Lanka (Co- Editor : M.Ali Azeez (2009)
31. எ.எம்.எ. அஸீஸ் - பன்முகப்பார்வை (துணைப்பதிப்பாசிரியர்: மருதூர் ஏ மஜீத் (2009)
32. Family of Muthalif Vaithiyar (Co-editiors: A.M. Razmy, A.J. Sabry Ahamed, M.M. Mohamed Musfique and Mrs. Rizana Naseer (2009)
33. The Muslim Heritage of Eastern Sri Lanka (Co-Editor: Asiff Hussin) (2011)
34. A.M.A. Azeez - The West Reappraised (Co-Editor: M. Ali Azeez) (2011)

'சுவடி ஆற்றுப்படை' என்பது மிகப்பயனுள்ளவொரு பணியாகும். இந்நாட்டில் முஸ்லிம் ஒருவரினால் முதன் முதலாக 1868 இல் அச்சிடப்பட்ட நூலிற் தொடங்கி, ஆண்டு ரீதியாக வரிசைக் கிரமமான முறையில் 2000 ஆம் ஆண்டு வரையில் முஸ்லிம்களினால் எழுதி அச்சிட்டு வெளியிடப்பட்ட அனைத்து நூல்களுமான 1977 பிரசுரங்களின் விபரங்களை இது கொண்டுள்ளது. இத்தகையதொரு பணி இதுவரை இந்தியாவிலோ, மலேசியாவிலோ, சிங்கப்பூரிலோ கூட மேற் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"இலங்கை இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியிலிருந்து இக்கால கட்டம் வரை சுமார் இரண்டாயிரத்தைக் கிட்டிய எண்ணிக்கையில் இலக்கிய வாதிகள் வாழ்ந்து மரணித்து விட்டார்கள், வாழ்ந்தும் வருகிறார்கள். இருப்பினும் ஒருவர் கூடச் சிந்திக்காத மாபெரும் வரலாற்றுப் பணியினை இவர் ஆற்றி வருவது வரலாற்றில் இவருக்கென்று ஒரு நிலையான பதிவினை வழங்கும் என்பது திண்ணமாகும்." (பி.எம்.புன்னியாமீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று, 'கிராமத்து இதயம்' என்பது நாட்டுப்புறப் பண்பாட்டியல் ஆய்வு நூலாகும். நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களின் நாட்டுப் புறப்பாடல்களைத் தொகுத்த முன்னோடி முயற்சியாகவும் இது பதிவாகின்றது. இலங்கை வானொலியில் இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. 1995 இல் வெளிவந்த இந்நூலுக்கு சிறந்த இலக்கிய ஆய்வுக்கான அரச சாகித்திய விருது கிடைத்தது. வடக்கு - கிழக்கு மாகாண சபையின் 1995ஆம் ஆண்டுக்கான இலக்கியப் பரிசும் கிடைத்தது. இந்நூலின் விரிவாக்கிய இரண்டாம் பதிப்பு 55 அரிய புகைப்படங்களுடனும் பல புதிய அம்சங்களுடனும் 2008 ஆம் ஆண்டு தேசபந்து ஜெஸிமா இஸ்மாயில் தலைமையிலான முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் வெளியிடப் பட்டுள்ளது.

இவரது பிறிதொரு மகத்தான சேவை, நாட்டின் பல கிராமங்களுக்கும் சென்று ஆயிரத்துக்கு மேற்பட்ட நாட்டுப் புறப்பாடல்களை அவற்றின் மூல ராகங்களில் ஒலிப்பதிவு செய்து, அவற்றுட் தேர்ந்தெடுத்த எழுநூறு பாடல்களை இறுவட்டில் (CD) பதிந்தமையாகும். 2011ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால், இவ்விறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இவருடைய நூல்கள், மொழிபெயர்ப்புக்கள், பதிப்புக்கள், பதிப்புரைகள், கட்டுரைகள், இரங்கல் கட்டுரைகள், சொற்பொழிவுகள், வானொலி - தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆய்வுகள் போன்றனவற்றின் விவரப்பட்டியல் இரு நூல்களாக வெளிவந்துள்ளன. அவையாவன:

1. ஏ. சாஹிபு லெப்பை - எண்ணமும் எழுத்தும் - 1995
2. எஸ்.எல். சியாத் அஹமட் - அறிவாக்கங்கள் - 2010

## இலக்கியப் பணி

கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இவர் கடமையாற்றிய காலத்தில், அக்கல்லூரி பல புதிய இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டது. கே. எம். அபூபக்கர் அதிபராகக் கடமையாற்றிய வேளையில் அங்கு ஆசிரியராகச் சேர்ந்த இவர், அக்கல்லூரியின் முதலாவது அச்சுச் சஞ்சிகையான 'மாணவ மஞ்சரி' என்பதனை 1965 இல் பதிப்பித்தார்.

மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்காக 1976இல் ஆரம்பிக்கப்பட்ட 'ஸாஹிரா' மாதாந்தப் பத்திரிகை கிரமமாகப் பல ஆண்டுகள் வெளிவந்து, இன்று வரை இடைக்கிடையே வந்து கொண்டிருக்கிறது.



அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 'ஆண்டுக்கொரு நூல்' வெளியிடுதல் எனும் திட்டத்தினை அதே ஆண்டில் தொடங்கி 4 வருடங்களில் ஐந்து நூல்களை வெளியிட்டது. கவிஞர் அன்பு முகையதீன், எம். ஐ. எம். முஸம்மில், மருதூர் எ. மஜீத், புலவர் மீ. அஹமத், எஸ். எச் எம். ஜெமீல், யு. எல். ஆதம்பாவா என்போரின் முதலாவது நூல்களை இச்சங்கமே வெளியிட்டது.

அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை அதிபராக இருந்தபோது 1983 இல் இவரது ஆலோசனையிலும் தலைமையிலும் ஆரம்பிக்கப்பட்ட 'இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்' எனும் நிறுவனம் நூல்கள் வெளியீடு, இலக்கியக் கருத்தரங்குகள், வெளியீட்டு விழாக்கள், பாராட்டுக் கூட்டங்கள் போன்றவற்றை மிக உற்சாகமாக நடத்திக் கொண்டிருந்தது. எஸ். எச்.எம். ஜெமீல், அ. ஸ. அப்துஸ் ஸமத், மருதூர் எ. மஜீத், மருதூர்க் கொத்தன் வி.எம். இஸ்மாயில், அன்பு முஹையதீன், பாலமுனை பாறூக், எம்.எ. உதுமா லெப்பை, பாவலர் பசீல் காரியப்பர், மாறன் யூ. ஸெய்ன், எஸ். எ. ஆர். எம். ஸெய்யித் ஹஸன் மௌலானா, ஏ. யு.எம்.எ. கரீம், எ.கே.எம். நியாஸ் என்போர் இப்பணியகத்தின் நிர்வாகஸ்தர்களாவர்.

1986 இல் இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட 'எழுவான் கதிர்கள்' முக்கியவொரு தொகுப்பாகும். 1970 இன் பின் கவிதையாக்கத் தொடங்கிய தென்கிழக்குப் பிரதேசக் கவிஞர்களின் கவிதைகளை - அதாவது இளங்கவிஞர்கள் 24 பேரின் ஆக்கங்களை உள்ளடக்கியது இந்நூல். அவர்களிற் பலரது கவிதைகள் தொகுப்பு நூலொன்றில் வெளிவந்தமையும் அதுவே முதற் தடவையாகும். இவர்களிற் பலர் தொடர்ந்தும் எழுதி இன்று பிரபல கவிஞர்களாய் உள்ளனர்.

1990 களில் கிழக்கில் ஏற்பட்ட வன்முறைச் சூழலானது பணியகத்தின் சேவைகளை முடக்கிவிட்டது. இருந்தபோதிலும் 2000 ஆண்டுவரை 21 நூல்களை அது வெளியிட்டமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மேலதி-கச் செயலாளர், பின்னர் அவ்வமைச்சின் ஆலோசகர் ஆகிய பதவி களானது இவரது இலக்கியப் பணியினை மேலும் விரிவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஜாபீர் எ. காதர், எ. எச். எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்வர், லக்ஸ்மன் ஜயக்கொடி ஆகியோர் அமைச்சர்களாக இருந்த காலங்களில் அமைச்சின் செயலாளராகவும் பின்னர் ஆலோசகராகவும் கடமையாற்றிய 11 வருட காலத்தில் இவ்வமைச்சு மிகப் பெருந் தொகையான நூல்களையும், மலர்களையும் வெளியிட்டதிலும் பலரது நூல்களைப் பதிப்பித்தலிலும் எழுத்தாளர் மற்றும் கலைஞர் ஊக்குவிப்பிலும் பெரும் பங்களிப்புச் செய்தார்.

இவற்றுள் மிக முக்கியமானது இலங்கை முஸ்லிம்களினது வரலாற்றினையும் பண்பாட்டினையும் ஆய்வு செய்து ஆவணப்படுத்தி மாவட்ட ரீதியான நூல்களை வெளியிட்டமையாகும். இவ்விடயத்தில் அப்போது அமைச்சராயிருந்த எ.எச்.எம். அஸ்வரது வழிகாட்டலிலும், இவரது முயற்சியிலும் இப்பணி மிகத்துரிதமாக நடைபெற்றது. இதற்காகப் பல அறிஞர்களின் உதவிகள் பெறப்பட்டன. இவ்வாறு களுத்துறை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை, மாத்தறை, அம்பாறை, கம்பஹ, புத்தளம் ஆகிய மாவட்டங்களின் வரலாற்று நூல்கள் 1992 - 2000 ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்தன.

இப்பணியினை முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இன்றும் தொடர்கிறது. பொலன்னறுவை, வவுனியா, மன்னார் மாவட்டங்களினதும், அக்குறணை, பாத்ததும்பறைப் பிரதேசங்களினதும் வரலாறுகள் நூலுருப் பெற்றுள்ளன. ஏனைய மாவட்ட நூல்களும் வெளிவரும்போது பூரண வரலாறுடைய சமூகமாக முஸ்லிம்கள் திகழ முடியும்.

## கௌரவிப்புகள்

எஸ். எச். எம். ஜெமீல் அவர்கள் இதுவரை பெற்றுள்ள விருதுகளையும் கௌரவங்களையும் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்:

1. ஈராக்கின் தலைநகரான பக்தாதில் அரபுநாடுகளின் ஆசிரியர் சம்மேளனம் (Federation of Teachers of Arab Countries) கேடயம் வழங்கிக் கௌரவித்தமை - 1980
2. இலங்கை அரசின் இலக்கிய ஆய்வுக்கான சாஹித்திய விருது - 1995
3. வடக்கு - கிழக்கு மாகாணசபையின் இலக்கியப் பரிசு - 1995
4. திருச்சி (இந்தியா) M. I. E. T. கல்லூரியில் பொன்னாடை போர்த்தியும் ஞாபகச்சின்னம் வழங்கியும் கௌரவித்தமை - 1995



5. அட்டாளைச்சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவின் போது 'நஜ்முல் உலூம்' பட்டம் வழங்கிக் கௌரவித்தமை - 1997
6. அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் கௌரவம் - 1998
7. இந்தியாவில் நடைபெற்ற ஆறாவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழக மகாநாட்டில் 'தமிழ் மாமணி' பட்டம் வழங்கிக் கௌரவித்தமை - 1998
8. மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இயங்கும் கவிதா மாலை இயக்கம் 'தமிழ் அருவி' பட்டம் வழங்கிக் கௌரவித்தமை - 1999
9. இனங்களுக்கிடையேயான நல்லுறவு ஒன்றியம் இரத்தினபுரியில் 'சாமசிறி இலக்கிய வாணன்' விருது வழங்கிக் கௌரவம் - 1999
10. கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் விருது வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவம் -1999
11. உடத்தலவின்ன மடிகே சிந்தனை வட்டமும் மலையக கலை, கலாச்சார ஒன்றியமும் இணைந்து கண்டியில் 'இரத்தின தீபம்' விருது வழங்கிக் கௌரவம் - 2000
12. அம்பாறை மாவட்டக் கரையோர ஊடகவியலாளர் சங்கத்தினால் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிக் கௌரவம் - 2000
13. கொழும்பு ப்ரிய நிலா கலை - இலக்கியக் கழகத்தினால் பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கிக் கௌரவம் - 2001.
14. கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டில் விருது வழங்கிக் கௌரவம் - 2002.
15. கொழும்பு சாஹிராக் கல்லூரியினால் 'தமிழ்ப் பேரறிஞன்' எனக் கௌரவிப்பு - 2004.
16. ஸ்ரீ லங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணியினால் 'அறிவியல் மேதகை' பட்டமளித்துக் கௌரவிப்பு - 2007.
17. 'அதிசிறந்த கல்விமான்' விருது - கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம் - 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் பொன்னாடையும், விருதும் வழங்கிக் கௌரவம் - 2011.

## அமைப்புகளில் அங்கத்துவம்

தனது உத்தியோகபூர்வ பதவிகளுக்கும் கடமைகளுக்கும் அப்பால் இவர் வகித்த, வகித்து வருகின்ற பதவிகளினதும் அமைப்புகளினதும் பங்களிப்பினைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்:

1. மேனாட்டுச் சங்கீதப் பரீட்சைகளுக்குப் பதிலாக உள்நாட்டுப் பரீட்சைகளை நடத்துவதற்கான கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவின் செயலாளர் - (நியமன ஆண்டு) 1973
2. பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா வெளிவாரி மாணவர்களுக்கான மேற்பார்வையாளர் - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை - 1975
3. கல்முனை மாவட்ட அதிபர்கள் சங்கம் - ஸ்தாபகத் தலைவர் - 1975
4. அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் - தலைவர் - 1978
5. கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஆலோசனைக் குழு அங்கத்தவர் - 1980
6. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை ஆலோசனைச்சபை உறுப்பினர் - 1981.
7. கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி (மட்டக்களப்பு) முகாமைத்துவச் சபை உறுப்பினர் - 1981.
8. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம், இக்ராஹ் தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபக அங்கத்தினரும், நிர்வாக சபை உறுப்பினரும் - 1981.
9. இலங்கை முஸ்லிம் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான யுனெஸ்கோ (UNESCO) ஆய்வுக் குழு வின் அங்கத்தவர் - 1982.
10. இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம் - ஸ்தாபகத் தலைவர் - 1983.



11. கிழக்குப் பல்கலைக்கழகக் கவுன்சில் அங்கத்தவர் - 1986
12. ஸ்ரீலங்கா கணனி, தகவல் தொழில்நுட்பக் கவுன்சில் (Cintec) உறுப்பினர் - 1989.
13. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சிகள் ஆலோசனைச்சபை உறுப்பினர் - 1992.
14. கிழக்கு மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி முகாமைத்துவச் சபை உறுப்பினர் - 1992.
15. தென்கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாக ஆலோசகர் - 1996.
16. கல்வி அமைச்சின் இஸ்லாம் சமயக்கல்விக்கான ஆலோசனைச் சபை உறுப்பினர் - 1996; தலைவர் - 1999.
17. தேசிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழான, நிர்வாக அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனை இணைப்புக்குழு உறுப்பினர் - 1998.
18. கலாநிதி எ. எம். எ. அஸீஸ் மன்றம் - அங்கத்தினர் - 1998; தலைவர் - 2006.
19. கொழும்புத் தமிழ்ச்சங்கம் - உப காப்பாளர் - 1998
20. அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் ‘தமிழ் நெட்’ அமைப்புக் குழு உறுப்பினர் - 1999.
21. அரச ஆசியக் கழக (இலங்கைக் கிளை) உறுப்பினர் 1999; ஆயுட்கால உறுப்பினர் - 2004.
22. இலங்கைக் கலைக்கழகத்தின் முஸ்லிம் நுண்கலைக்குழு - தலைவர் 2001.
23. காதி மேன்முறையீட்டு நீதிச்சபை - அங்கத்தினர் - 2001.
24. தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள், அரபு மொழிப் பீடச்சபை அங்கத்தினர் - 2005.
25. முஸ்லிம் கல்வி ஆணைக்குழு அங்கத்தினராக ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய கல்வி அமைச்சரினால் நியமனம் - 2008.
26. தலைவர், நம்பிக்கையாளர் சபை, இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதி - 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. தலைவர், உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, மலேஷியா - இலங்கை ஏற்பாட்டுக்குழு - 2011.

## வெளிநாட்டுப் பயணங்கள்

சர்வதேசக் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்காகவும், கல்விச் சுற்றுலாக்களாகவும், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காகவும் பின்வரும் பயணங்களை மேற்கொண்டார்:

1980 - ஈராக்

1988 - இங்கிலாந்து

1991, 1993, 1995, 2003 - சவூதி அரேபியா-ஹஜ் நிறைவேற்றம்

1995, 2001, 2002 - சவூதி அரேபியா-உம்றா நிறைவேற்றம்

1995, 2000, 2001, 2007, 2010 - இந்தியா

1995 - துபாய், அபுதாபி, ஷார்ஜா

1995 - பஹ்ரைன்

1998 - லிபியா, மால்டா

2001 - சவூதி அரேபியா (2004 வரை - தொழில்)

2005 - மாலைதீவுகள்

2010 - பங்களாதேஷ்

2011 - மலேசியா

2011 - சிங்கப்பூர்

(Updated 2011)

S.H.M. Jameel
44A, Asiri Mawatha
Kalubowila
Dehiwela

Phone: 011 576 7607
Mobile: 071 861 8210
Email: shmjameel@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org